### சிவகங்கை மாவட்டம் – செட்டிநாட்டில் 330 ஏக்கரில்

# ரூ.61.79 கோடியில் வேளாண்மைக் கல்லூரி!

## கட்டிடங்களைத் திறந்து வைத்து – அரங்கத்திற்கு – ‘சி.சுப்பிரமணியம் பெயர்’ சூட்டினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

காரைக்குடி, பிப்.2-

**சிவகங்கை மாவட்டம், செட்டிநாட்டில் 330 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு ரூ.61.79 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்களையும், அங்கு அமைக்கப்பட்டுள்ள அரங்கத்திற்கு ”பாரத ரத்னா விருது பெற்ற சி.சுப்பிரமணியம் பல்நோக்கு அரங்கம்” என்று பெயர் சூட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 31.01.2026 அன்று சிவகங்கை மாவட்டம் செட்டிநாட்டில் 330 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 61 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களையும், அங்கு அமைக்கப்பட்டுள்ள அரங்கத்திற்கு ”பாரத ரத்னா விருது பெற்ற சி.சுப்பிரமணியம் பல்நோக்கு அரங்கம்” என்று பெயர் சூட்டி அவ்வரங்கத்தினையும் திறந்து வைத்தார்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

பாரம்பரியம் மிக்க, பொன்விழா கண்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 1971-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 47,888 இளங்கலை மாணவர்களுக்கும், 13,259 முதுகலை மாணவர்களுக்கும், 4,295 முனைவர் மாணவர்களுக்கும் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த துறைகளில் பட்டம் வழங்கி சிறந்த முறையில் கல்வியை வழங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகம் வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் என மூன்று பிரிவுகளிலும் சிறப்புற செயல்பட்டு வருகிறது.

**இந்த அரசு பொறுப்பேற்றது முதல், ஐந்து முறை தாக்கல் செய்யப்பட்ட வேளாண்மை-உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கைகளில் வேளாண்மை கல்வி, வேளாண்மை ஆராய்ச்சிக்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 3,065 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** மேலும், ஐந்து ஆண்டுகளில் 101 புதிய பயிர் இரகங்கள், 21 வேளாண் நுட்பங்கள், 16 புதிய பண்ணைக் கருவிகள் நமது உழவர் பெருமக்களின் பயன்பாட்டிற்காக வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் உயர்கல்வி உறுதிக்கான இலட்சியத் திட்டமான ”புதுமைப்பெண்” திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 2,964 மாணவியருக்கும், ”தமிழ்ப்புதல்வன்” திட்டத்தின் கீழ் 1,628 மாணவர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. ”உலகம் உங்கள் கையில்” - தமிழ்நாடு அரசு மடிக்கணினித் திட்டத்தின் கீழ் 5,407 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு வழங்கிய 7.5 சதவீத மாணவர் இடஒதுக்கீட்டின் கீழ் இதுவரை 1,708 மாணவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்பட்டு கல்வி பயின்று வருகின்றனர்.

தமிழ்வழிக் கல்வி திட்டத்தின் கீழ் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டப்படிப்புகள் 2021-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டு, இதுவரை 467 மாணவர்கள் தமிழ்வழி வேளாண்மை மற்றும் தோட்டக்கலை படிப்பு பயின்றுள்ளனர். இளங்கலை மாணவர்களின் பட்டறிவினை உயர்த்திடும் நோக்கில் ஒரு மாணவர் - ஒரு வேளாண் குடும்பம் திட்டம் தொடங்கப்பட்டு 2,395 முதலாமாண்டு இளங்கலை மாணவர்கள் வேளாண் குடும்பங்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், 2021-22ஆம் ஆண்டில் நாகப்பட்டினம், கரூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் மூன்று புதிய அரசு வேளாண் கல்லூரிகள் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு தோட்டக்கலைக் கல்லூரி புதிதாக தொடங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு 176 கோடியே 72 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**செட்டிநாட்டில் செயல்பட்டுவரும் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு புதிய கட்டடங்கள் திறப்பு**

அவ்வகையில், சிவகங்கை மாவட்டம், செட்டிநாட்டில் செயல் பட்டுவரும் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலை யத்திற்கு 61 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங் களையும், புதிதாக கட்டப் பட்ட அரங்கத்திற்கு ”பாரத ரத்னா விருது பெற்ற சி. சுப்பிர மணியம் பல்நோக்கு அரங்கம்” எனப் பெயர் சூட்டி, அவ்வரங்கத்தினையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்தார். பின்னர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அவ்வளாகத்தில் மரக்கன்றை நட்டு, வகுப்பறைகள், பல்நோக்கு அரங்கம், ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு, மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

இக்கல்லூரிக்கான கட்டடங்கள் சுமார் 2.52 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் கட்டப்பட்டு, அப்புதிய கட்டடத்தில், நிர்வாக அலுவலகக் கட்டடம், 250 மாண வர்கள் அமரக்கூடிய வகையில் இணைய தள வசதியுடன் கூடிய நான்கு வகுப்பு அறைகள், 12 துறை களுக்கான ஆய்வுக் கூடங்கள், மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள், உணவக விடுதி, சிற்றுண்டி விடுதி, மருத்துவ மையம், 1,500 நபர்கள் அமரக்கூடிய பல்நோக்கு அரங்கம், நூலகம் மற்றும் மாணவர்களுக்கான இணையதள மையம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இக்கல்லூரியில் மானாவாரிப் பயிர்களான நிலக்கடலை, சிறுதானியங்கள், பயறுவகை களுக்குத் தேவையான வேளாண் சாகுபடி உத்திகளை உருவாக்குதல், குறைந்த நீர் தேவைப்படும், அதிக மதிப்புள்ள பயிர்களுக்கு முக்கியத்துவம் அளித்தல், வறண்ட மண்டல பழப்பயிர்கள், மரங்கள் மற்றும் தீவனப்பயிர்கள் மேம்பாடு, வேளாண்மை, தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி மற்றும் மரம் வளர்ப்பு போன்றவற்றின் மூலம் நில பயன்பாட்டுக்கான ஒருங்கிணைந்த பண்ணையமுறை, மானாவாரி பயிர்களுக்கான மழைநீர் சேகரிப்பு மற்றும் நுண்ணீர்ப்பாசன அமைப்புகள் நிறுவுதல், பண்ணைக்குட்டைகள் போன்ற நீர்செறிவூட்டு அமைப்புகள் மூலம் உற்பத்தித் திறன் அதிகரித்தல், மானாவாரி நிலங்களில் இயந்திரமயமாக்கல், விவசாயிகள் மற்றும் கிராமப்புர இளைஞர்களுக்கு திறன்மேம்பாட்டு பயிற்சி அளித்தல் போன்ற நோக்கங்களுடன் இக்கல்லூரி செயல்பட்டு வருகிறது.

மேலும், இக்கல்லூரியில் மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருவதுடன், புதிய உணவு செய்முறைகள் மற்றும் பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள், குறிப்பாக சிறுதானியங்கள், பழங்கள் மற்றும் பிற வேளாண்விளைபொருட்களில் பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டுதல் தொழில் நுட்பங்களை உருவாக்கவும், பயிற்சி அளிக்கவும் உணவு பதப்படுத்துதல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் ஒன்றும், மானாவாரி மேலாண்மை மகத்துவ மையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

2025 ஆம் ஆண்டில், இக்கல்லூரி வறட்சியைத் தாங்கி வளரும், அதிக மகசூல் தரவல்ல “செட்டிநாடு 1” என்னும் புதிய நிலக்கடலை இரகம் வெளியிட்டுள்ளது. மேலும் 10 உள்ளூர் மரவகைகளைக் கொண்டு பன்முகத்தன்மை கொண்ட வேளாண் காடுகள் மாதிரி ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை 3,930 விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப. சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி, வேளாண்மை - உழவர் நலத்துறைச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கா. பொற்கொடி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் (பொ) முனைவர் கா. சுப்ரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 31.01.2026 அன்று சிவகங்கை மாவட்டம் செட்டிநாட்டில் 330 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 61 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களையும், அங்கு அமைக்கப்பட்டுள்ள அரங்கத்திற்கு பாரத ரத்னா விருது பெற்ற சி. சுப்பிரமணியம் பல்நோக்கு அரங்கம் என்று பெயர் சூட்டி அவ்வரங்கத்தினையும் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, எஸ்.இரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சிவ.வீ. மெய்யநாதன், ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப. சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# அரியலூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

*அரியலூர், பிப். 2-*

*அரியலூர் மாவட்ட கழகச் செயற்குழுக் கூட்டம், அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது. நடைபெற்றக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளிடம் பேசியதாவது:-*

*பிப்ரவரி 1ஆம் தேதி தொடங்கி மார்ச் 8ஆம் தேதி வரை வெல்லும் தமிழ்ப்பெண்கள் மகளிர் பரப்புரை ஒன்றியம், நகர, பேரூர் கழகங்கள் தோறும் மிக சிறப்பாக நடத்திட வேண்டும், தமிழ்நாடு தலைகுனியாது தொகுதி பரப்புரை பொதுக்கூட்டங்கள் மாவட்டம் முழுவதும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் பரப்புரைக் கூட்டங்கள் நடத்திட வேண்டும்,*

*கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட வேண்டும், மேலும் எதிர்வருகின்ற 08.03.2026 அன்று நடைபெறும் “ஸ்டாலின் தொடரட்டும். தமிழ்நாடு வெல்லட்டும்” மாநில மாநாட்டிற்கு அரியலூர் மாவட்ட கழகத்தின் சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ளவேண்டும், உள்ளிட்ட கழக ஆக்கப் பணிகள் குறித்தும் உரையாற்றினார்.*

*இக்கூட்டத்தில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன்,*

*மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதா பாலு, மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரெ. சக்கரவர்த்தி, கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி. எழில்மாறன், இரா.அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ்.முருகன், இரா.செந்தில்குமார், நகர கழக செயலாளர்கள்*

*இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள். ப.கோபாலகிருஷ்ணன் அ.அல்போன்ஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.எம்.அன்பழகன், இரா.பாலு, வி.எம்.ஷாஜகான், சுமதிகருணாநிதி, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.ஞாயிகதிரவன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.*



திருச்சியில் தமிழக அரசியலில் திருப்புமுனையை ஏற்படுத்தும் வகையில் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஸ்டாலின் தொடரட்டும், ‘தமிழ்நாடு வெல்லட்டும்’ என்கிற தலைப்பில் மிகப்பிரம்மாண்டமான மாநாடு மார்ச் 8 தேதி நடைபெற உள்ளது. திருச்சி சிறுகனூரில் நடைபெறும் இந்த மாநாட்டில் சுமார் 10 லட்சம் பேர் கலந்து கொள்கின்றனர். இந்நிலையில் மாநாட்டுப் பணிகளைத் தொடங்கும் விதமாக திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலை சிறுகனூரில் மாநாடு நடைபெறும் இடத்தில் பந்தக்கால் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தி.மு.க. முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு, தெற்கு மாவட்டச் செயலாளரும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் மாநாட்டு பணிகளைத் தொடங்கி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் காடுவெட்டி தியாகராஜன், பழனியாண்டி, சௌந்திரபாண்டியன், ஸ்டாலின் குமார், கதிரவன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மையர் அன்பழகன், கிழக்கு மாநகரச் செயலாளர் மதிவாணன், முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி, மாவட்ட துணைச் செயலாளர் முத்துச்செல்வம், விஜய், ஜெயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் சேர்மன் துரைராஜ், காஜாமலை, விஜய், மாத்தூர் கருப்பையா, டோல்கேட் சுப்பிரமணி உட்பட ஒன்றியச் செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் திருச்செங்கோடு கிழக்கு, மேற்கு நகர தி.மு.க. சார்பில், திராவிட மாடல் அரசின் 5 ஆண்டுகால சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் மாபெரும் சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, திருச்செங்கோடு மேற்கு நகர கழகப் பொறுப்பாளர் ஆர்.நடேசன்,, கிழக்கு நகர கழகப் பொறுப்பாளர் தா.கார்த்திகேயன் மற்றும் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.